நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**CC. No.295 /2020**

**P.W.6 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சார்லஸ்ராஜா |
| தந்தை / கணவர் பெயர் | : | ஜான்ஜோஸப் |
| கிராமம் | : | மாசிலாபாளையம் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW6** |
| வயது | : | 45 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 11–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.31 AM

1. நான் தற்போது மாசிலாபாளையத்தில் குடியிருக்கிறேன். சம்பவத்தின் போது தெர்மலில் வேலை செய்து வந்தேன். தற்போது கூலி வேலை செய்து வருகிறேன். 2019–ம் வருடம் தெமர்மலில் வேலை செய்து கொண்டிருந்தேன், அப்போது என்னுடைய சித்தப்பா பிரான்சிஸ் செல்போன்

மூலமாக போன் செய்தார். அவர் என்னுடைய சித்தப்பா பிரான்சிஸ், அற்புதமேரி சிலர் மற்றும் ஆஜர் எதிரிகள் மற்றும் அம்மாசி என்பவரின் பழைய வீட்டை வேலை செய்வதற்காக சென்றபோது சுவர் இடிந்து இரண்டு, மூன்று நபர்கள் மீது விழுந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். தகவல் தெரிந்து நான் அம்மாசியின் வீட்டின்று சென்று பார்த்தேன்.

2. அடிபட்டவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு செல்வதாக சொன்னார்கள். அதன் பிறகு நான் மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு சென்று அற்புதமேரி இந்த சம்பவத்தில் இறந்துவிட்டதாகவும், என்னுடைய சித்தப்பா பிரான்சிஸை சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும் சொன்னார்கள். நான் அற்புதமேரியின் மகனுக்கு இந்த தகவலை சொன்னேன். போலீர் என்னை விசாரித்தார்கள்.

**1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

3. சம்பவத்தின் போது நான் தெர்மலில் வேலை செய்து கொண்டிருந்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற நேரத்தில் நான் அந்த இடத்தில் இல்லை. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. நான் சம்பவத்தை பற்றி கேள்விபட்டுதான் சம்பவ இடத்திற்கு வந்தேன். பிரான்சிஸ் போன் மூலமாக எனக்கு போன் செய்த நபர் யார் என்று எனக்கு தெரியாது. இறந்துபோன நபர் எனக்கு துாரத்து உறவினர் ஆவார். போலீசார் என்னை எங்கு விசாரித்தார்கள் என்றால் சவக்கிடங்கு முன்பாக வைத்து விசாரித்தார்கள். சம்பவத்தின் போது அ.சா.1 அந்த இடத்தில் இல்லை என்றால் சரிதான். இறந்துபோன நபர் எனக்கு உறவினர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், இந்த வழக்கிற்கும் 1–ம் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**(2–ம் எதிரி தரப்பில் 1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை தனது என பாவிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது)**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.40 P.M.

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஒம்/—நா.கோபாலகிருஷ்ணன்
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.